ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2024 பெப்புருவரி 29

# வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் - 2024 சனவரி

## முக்கிய பண்புகள்

- வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது உயர்ந்தளவிலான இறக்குமதிச் செலவினத்தின் முக்கிய காரணமாக 2024 சனவரியில் விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தது.
- பணிகள் வர்த்தகத்தினைப் பொறுத்தவரையில், கடல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து மற்றும் கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய பணிகள் என்பன 2023 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. அதேவேளை, விமானப் போக்குவரத்து, கடல் போக்குவரத்து, முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை வழங்குகின்ற பணிகள் என்பவற்றில் வெளிப்பாய்ச்சல்கள் பதிவுசெய்யப்பட்டன.
- தொழிலாளர் பணவனுப்பல்கள் முன்னைய ஆண்டின் சனவரி மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024இன் தொடர்புடைய காலப்பகுதியில் மேம்பாடொன்றினைப் பதிவுசெய்தன.
- சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் 2020 சனவரியிலிருந்தான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் உயர்ந்தளவிலான மாதாந்தப் பெறுமதியினைப் பதிவுசெய்தன.
- அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2024 சனவரியில் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.
- மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2024 சனவரி இறுதியளவில் ஐ.அ.டொலர் 4.5 பில்லியனிற்குத் தொடர்ந்தும் மேம்பட்டதுடன் இலங்கை ரூபாவானது 2024 பெப்புருவரி 29 வரையான ஆண்டு காலப்பகுதியில் 4.4 சதவீத உயர்வொன்றினைப் பதிவுசெய்தது.

## வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம்

### ஏற்றுமதிகள்




### இறக்குமதிகள்




### வர்த்தகப் பற்றாக்குறை




### சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள்




### பணிகள் துறை
(சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் தவிர்ந்த)




### தொழிலாளர் பணவனுப்பல்கள்




### மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்*




* சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியுள்ளது

### அரச பிணையங்கள் சந்தைக்கான தேறிய உட்பாய்ச்சல்கள் மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய உட்பாய்ச்சல்கள்
(முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் - தேறிய)




### வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள் (ஐ.அ.டொ/ரூ)



## வணிகப்பொருள் வர்த்தக மீதி

வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது முக்கியமாக இறக்குமதிகளில் ஏற்பட்ட உயர்ந்தளவிலான அதிகரிப்புடன் 2023 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 445 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் ஐ.அ.டொலர் 541 மில்லியனிற்கு விரிவடைந்தது. மேலும், வர்த்தகப் பற்றாக்குறையானது 2023 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 487 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் விரிவடைந்தது.

**வரைபடம் 1: ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: இறக்குமதிகளின் உள்ளடக்கம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்[1]

**வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2023 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 978 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் ஐ.அ.டொலர் 971 மில்லியனிற்கு 0.8 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன.** 2024 சனவரியில் கைத்தொழில் ஏற்றுமதிகள் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் என்பவற்றின் வருவாய்களில் வீழ்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்ட வேளையில் வேளாண்மை ஏற்றுமதிகளில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது. 2023 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் **கைத்தொழில் பொருட்களில்** ஏற்பட்ட வீழ்ச்சிக்கு ஆடைகள் முக்கியமாகப் பங்களித்திருப்பதுடன் இது அநேகமான முக்கிய சந்தைகளுக்கான தாழ்ந்தளவிலான ஆடை ஏற்றுமதிகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருள் ஏற்றுமதிகள் ஆகிய இரண்டினதும் அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன. சிறு வேளாண்மை உற்பத்திகள், தெங்குடன் தொடர்புடைய உற்பத்திகள் மற்றும் தேயிலை என்பவற்றினால் முக்கியமாகப் பங்களிக்கப்பட்டு, **வேளாண்மைப் பொருட்களின்** ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் மேம்பட்டன. அதேவேளை, 2023 சனவரியில் தைட்டானிய தாதின் உயர்ந்தளவிலான ஏற்றுமதிகளின் தளத் தாக்கத்தின் காரணமாக **கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்[1]

**வணிகப்பொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் 2023 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1,423 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் ஐ.அ.டொலர் 1,512 மில்லியனிற்கு 6.2 சதவீதத்தினால் அதிகரித்தன.** இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் தளர்வினால் பகுதியளவில் உந்தப்பட்ட நுகர்வுப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் என்பன மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது இவ்வதிகரிப்பிற்குப்

---

[1] இலங்கை மத்திய வங்கியின் வணிகப்பொருள் வர்த்தகத்தின் வகைப்படுத்தல் மற்றும் நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4இன் அடிப்படையிலமைந்த வகைப்படுத்தல் என்பன முறையே இணைப்பு II, இணைப்பு III, இணைப்பு IV மற்றும் இணைப்பு IV இல் காட்டப்பட்டுள்ளன.

பங்களித்தது. ஓராண்டிற்கு முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் **நுகர்வுப் பொருட்கள்** மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது உணவு மற்றும் உணவல்லா நுகர்வுப் பொருட்கள் ஆகிய இரண்டினதும் செலவினத்தில் ஏற்பட்ட பரந்த அடிப்படையிலான அதிகரிப்பினால் தோற்றுவிக்கப்பட்டது. அதேவேளை, உயர்ந்தளவிலான நீர்மின்வலு உருவாக்கத்தின் பகுதியளவிலான காரணத்தினால் ஏற்பட்ட தாழ்ந்தளவிலான எரிபொருள் இறக்குமதிகளினால் உந்தப்பட்டு **இடைநிலைப் பொருட்கள்** மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாக, அடிப்படை உலோகங்கள் மீதான செலவினமும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளையில் புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் அதிகரித்தது. பொறி மற்றும் கருவிகளின் உயர்ந்தளவிலான இறக்குமதிகளினால் முக்கியமாக உந்தப்பட்டு **முதலீட்டுப் பொருட்கள்** மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்த அதேவேளையில் உயர்ந்தளவிலான இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதிகள் காரணமாக கட்டடவாக்கப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினமும் அதிகரித்தது.

## வணிகப்பொருள் வர்த்தகச் சுட்டெண்கள்[2]

இறக்குமதி விலைகளுக்கு ஏற்றுமதி விலைகளின் விகிதமாக விளங்குகின்ற **வர்த்தக மாற்று விகிதமானது** இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினை விஞ்சிக் காணப்பட்டமையினால் 2023 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் 3.6 சதவீதத்தினால் தேய்வடைந்து காணப்பட்டது.

ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 4.4 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 4.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது 2024 சனவரியில் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட சிறியளவிலான வீழ்ச்சி தாழ்ந்தளவிலான ஏற்றுமதி விலைகளுக்குப் பங்களித்திருக்கக்கூடுமென்பதனைச் சுட்டிக்காட்டியது.

அதேவேளை, இறக்குமதி அளவுச் சுட்டெண் 7.7 சதவீதத்தினால் மேம்பட்ட வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 1.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது 2024 சனவரியில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது அளவுத் தாக்கத்தினால் உந்தப்பட்டமையினைச் சுட்டிக்காட்டியது.

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 4: ஏற்றுமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

[2] ஐ.அ.டொலர் நியதிகளில்

## பணிகள் துறைச் செயலாற்றம்[3]

**சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள்:** சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் முன்னைய மாதத்தில் மதிப்பிடப்பட்ட ஐ.அ.டொலர் 269 மில்லியன் மற்றும் 2023 சனவரியில் பதிவுசெய்யப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 154 மில்லியன் கொண்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் ஐ.அ.டொலர் 342 மில்லியனாக மதிப்பிடப்பட்டன.

**வரைபடம் 6: சுற்றுலாத்துறையிலிருந்தான மாதாந்த வருவாய்கள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 7: மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**ஏனைய பணிகள் துறை உட்பாய்ச்சல்கள்[4]:** கடல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து மற்றும் கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய பணிகள் என்பன 2024 சனவரியில் பணிகள் துறைக்கான உட்பாய்ச்சல்களுக்கு முக்கியமாகப் பங்களித்தவையாகக் காணப்பட்டன. மொத்த பணிகள் துறை உட்பாய்ச்சல்கள் (சுற்றுலாத்துறையிலிருந்தான வருவாய்கள் நீங்கலாக) 2023 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 259 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் ஐ.அ.டொலர் 248 மில்லியனாக மதிப்பிடப்பட்டன.

**வரைபடம் 8: முக்கிய பணிகள் துறை உட்பாய்ச்சல்கள்**




**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை - இலங்கை மத்திய வங்கி

---

[3] 2024 சனவரியிலிருந்து, இலங்கை மத்திய வங்கி அதன் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் அடிப்படையிலமைந்த மிகவும் விரிவான மாதாந்த பணிகள் துறைப் புள்ளிவிபரங்களை அறிக்கையிடுவதற்கான நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளது.

[4] தற்காலிகமானது

**பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்கள்**[4]**:** விமானப் போக்குவரத்து, கடல் போக்குவரத்து மற்றும் முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை வழங்குகின்ற பணிகள் என்பன 2024 சனவரியில் பணிகள் துறையிலிருந்தான முக்கிய வெளிப்பாய்ச்சல்களுக்கு முக்கிய காரணமாயமைந்தன. மொத்த பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்கள் 2023 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 148 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் ஐ.அ.டொலர் 183 மில்லியனாக மதிப்பிடப்பட்டன.

**வரைபடம் 9: முக்கிய பணிகள் துறை வெளிப்பாய்ச்சல்கள்**




**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை - இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய அபிவிருத்திகள்

**தொழிலாளர் பணவனுப்பல்கள்:** தொழிலாளர் பணவனுப்பல்கள் 2023 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 437 மில்லியனுடனும் 2023 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 570 மில்லியனுடனும் ஒப்பிடுகையில் 2024 சனவரியில் ஐ.அ.டொலர் 488 மில்லியனாக விளங்கின. இடைக்கிடையேயான பருவகால தளம்பல்கள் பதிவுசெய்யப்பட்ட போதிலும் 2022இல் குறிப்பிடத்தக்க மீட்சியொன்றினைப் பதிவுசெய்ததிலிருந்து தொழிலாளர் பணவனுப்பல்கள் பரந்த அடிப்படையிலான அதிகரித்துச் செல்கின்ற போக்கொன்றினைத் தொடர்ந்தும் பதிவுசெய்தன.

**வரைபடம் 10: மாதாந்த தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** உரிமம்பெற்ற வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

[4] தற்காலிகமானது

## நிதியியல் பாய்ச்சல்கள்

அண்மைய மாதங்களில் தேறிய வெளிப்பாய்ச்சல்களைத் தொடர்ந்து பதிவுசெய்த அரச பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2024 சனவரியிலும் ஐ.அ.டொலர் 10 மில்லியன் பெறுமதி கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர ஆகிய இரண்டு சந்தைக் கொடுக்கல்வாங்கல்களும் உள்ளடங்கலாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2024 சனவரியில் ஐ.அ.டொலர் 5 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2024 சனவரி இறுதியளவில் ஐ.அ.டொலர் 4.5 பில்லியனிற்குத் தொடர்ந்தும் மேம்பட்டன. இது பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.4 பில்லியனிற்கு நிகரான சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்கியது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் அதிகரிப்பிற்கு உள்நாட்டு சந்தையிலிருந்து மத்திய வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் கணிசமானளவிலான தேறிய கொள்வனவுகள் முக்கிய காரணமாயமைந்தன. ஒட்டுமொத்தமாக, 2024 சனவரி மாத காலப்பகுதியில் தேறிய அடிப்படையொன்றில் ஐ.அ.டொலர் 245 மில்லியன் தொகைக்கு மத்திய வங்கி கொள்வனவு செய்துள்ளது.

**வரைபடம் 11: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமாந்தன்மை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

**திசெம்பர் மாத பிற்பகுதியிலிருந்து பதிவுசெய்யப்பட்ட செலாவணி வீத உயர்வடைந்து செல்கின்றபோக்கானது 2024இன் இதுவரையான காலப்பகுதியில் தொடர்ந்தும் காணப்பட்டது.** 2024 பெப்புருவரி 29 வரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக 4.4 சதவீதத்தினால் உயர்வடைந்தது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 2024 பெப்புருவரி 29 வரையான ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபாவானது யூரோ, ஸ்ரேலிங் பவுன், யப்பானிய யென், இந்திய ரூபா மற்றும் அவுஸ்திரேலிய டொலர் ஆகிய ஏனைய முக்கிய நாணயங்களிற்கெதிராக உயர்வடைந்தது. பெயரளவு உயர்வடைதலுடன் இசைந்து செல்லும் விதத்தில், உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதமும் (REER 24) 2024 சனவரி மாத காலப்பகுதியில் உயர்வடைந்தது. இருப்பினும், உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 100 சுட்டெண் புள்ளிகளின் மட்டத்திற்கு மிகவும் கீழாகத் தொடர்ந்தும் காணப்பட்டமையானது வெளிநாட்டுத்துறைப் போட்டித்தன்மையின் பேணுகையினைக் குறித்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 12: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 13: உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத (REER 24) அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு***

| நாணயம் | 2022 | 2023 | 2024 (பெப் 29 வரை) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -44.8% | +12.1% | +4.4% |
| யூரோ | -41.4% | +7.9% | +6.8% |
| ஸ்ரேலிங் பவுன் | -38.1% | +6.0% | +5.0% |
| யப்பானிய யென் | -36.4% | +19.5% | +10.8% |
| அவுஸ்திரேலிய டொலர் | -40.8% | +10.8% | +9.8% |
| இந்திய ரூபா | -38.6% | +12.6% | +4.2% |

*தேய்வு(-)/உயர்வு(+)

மூலம்: இலங்கை மத்திய வங்கி

*2024 பெப்புருவரி மாதத்திற்கான வெளிநாட்டுத்துறை ஊடக அறிக்கை வெளியீடு முன்கூட்டி வெளியிடப்படும் நாட்காட்டியின்படி 2024 மாச்சு 28 அன்று வெளியிடப்படும்.*

**இணைப்பு I:**

**வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் சுருக்கம் (அ)**

| வகை | 2022 (ஐ.அ.டொ. மில்) | 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | சன 2023 (ஐ.அ.டொ. மில்) | சன 2024 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| வணிகப்பொருள் ஏற்றுமதிகள் | 13,106 | 11,911 | -9.1 | 978 | 971 | -0.8 |
| வணிகப்பொருள் இறக்குமதிகள் | 18,291 | 16,811 | -8.1 | 1,423 | 1,512 | 6.2 |
| வர்த்தக மீதி | -5,185 | -4,900 | | -445 | -541 | |
| பணிகள் உட்பாய்ச்சல்கள் | | | | | | |
| *இதில்* | | | | | | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 1.136 (ஆ) | 2,068 (இ) | 82.0 | 154 (இ) | 342 (ஈ) | 122.7 |
| கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக்கொள்ளலுடன் தொடர்புடைய பணிகள் | | | | 62.2 | 43.2 | -30.6 |
| கடல் போக்குவரத்து (சரக்கு) | | | | 44.4 | 54.0 | 21.8 |
| விமானப் போக்குவரத்து (சரக்கு) | | | | 12.1 | 2.9 | -75.8 |
| விமானப் போக்குவரத்து (பயணி) | | | | 24.3 | 28.6 | 17.6 |
| பணிகள் வெளிப்பாய்ச்சல்கள் | | | | | | |
| *இதில்,* | | | | | | |
| வெளிநாட்டுப் பயணம் | | | | 13.3 | 14.7 | 11.1 |
| கடல் போக்குவரத்து (சரக்கு) | | | | 22.1 | 30.8 | 39.1 |
| விமானப் போக்குவரத்து (சரக்கு) | | | | 12.3 | 3.9 | -68.3 |
| விமானப் போக்குவரத்து (பயணி) | | | | 16.1 | 19.2 | 18.9 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 3,789 | 5,970 | 57.5 | 437 | 488 | 11.4 |
| தனிநபர் பரிமாற்றல் வெளிப்பாய்ச்சல்கள் | | | | 10.2 | 8.7 | -14.6 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல்கள் (தேறிய) (உ) | 182 | 18 | | 1 | -5 | |
| அரச பிணையங்கள் சந்தைக்கான மொத்த உட்பாய்ச்சல்கள் | 69 | 824 | | 3 | 51 | |
| திரண்ட நிலுவை | -2,068 | 2,826 | | 211 | 178 | |
| ***ஞாபகார்த்த விடயங்கள்*** | | | | | | |
| சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் | 719,978 | 1,487,303 | | 102,545 | 208,253 | |
| வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்கான நாட்டிலிருந்தான புறப்படுகைகள் | 311,056(ஊ) | 297,305 | | 25,249 | 24,182 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானது
(ஆ) 2022இல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது
(இ) 2023இல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையிலானது
(ஈ) 2024இல் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையிலானது
(உ) முதலாந்தர மற்றும் இரண்டாந்தரக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகின்றது
(ஊ) திருத்தப்பட்டது

**இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட "மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு" ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள் > பொருளாதாரக் குறிகாட்டிகள் > மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.**
https://www.cbsl.gov.lk/ta/node/6181

**இணைப்பு II:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | திசெ 2022 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2022 (ஐ.அ.டொ. மில்) | 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **10,465.3** | **9,277.7** | **-11.3** | **781.3** | **771.5** | **-1.3** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 519.5 | 539.3 | 3.8 | 34.7 | 44.0 | 26.8 |
| விலங்குத்தீன் | 170.5 | 145.6 | -14.6 | 16.2 | 8.7 | -46.3 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 5,952.0 | 4,878.9 | -18.0 | 424.4 | 381.2 | -10.2 |
| இதில் ஆடைகள் | 5,483.1 | 4,440.6 | -19.0 | 388.9 | 349.1 | -10.2 |
| புடவைகள் | 353.7 | 338.1 | -4.4 | 27.4 | 23.0 | -16.1 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 115.2 | 100.2 | -13.1 | 8.1 | 9.1 | 12.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 977.0 | 902.2 | -7.7 | 72.7 | 80.0 | 10.2 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 450.6 | 500.0 | 11.0 | 54.1 | 48.2 | -11.0 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 580.9 | 598.2 | 3.0 | 50.8 | 40.0 | -21.3 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 129.3 | 149.3 | 15.4 | 5.7 | 4.8 | -16.0 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 568.0 | 539.4 | -5.0 | 46.4 | 85.9 | 85.0 |
| இரசாயன உற்பத்திகள் | 223.5 | 193.5 | -13.4 | 12.7 | 18.9 | 48.8 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 136.9 | 114.0 | -16.7 | 9.7 | 8.8 | -9.9 |
| அச்சிடல் கைத்தொழில் பொருட்கள் | 53.1 | 55.1 | 3.9 | 7.6 | 3.6 | -52.5 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 85.8 | 71.2 | -17.0 | 5.2 | 4.3 | -18.8 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 60.9 | 56.3 | -7.6 | 4.1 | 4.6 | 10.6 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 176.7 | 178.3 | 0.9 | 10.3 | 14.1 | 37.3 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 38.1 | 34.0 | -10.7 | 3.0 | 1.8 | -40.3 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 342.4 | 322.5 | -5.8 | 23.6 | 22.8 | -3.4 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,568.0** | **2,566.5** | **-0.1** | **191.0** | **195.5** | **2.4** |
| தேயிலை | 1,258.8 | 1,309.9 | 4.1 | 99.6 | 102.2 | 2.6 |
| இறப்பர் | 41.4 | 28.0 | -32.2 | 3.2 | 1.7 | -47.4 |
| தேங்காய் | 400.3 | 336.8 | -15.9 | 22.0 | 24.8 | 13.0 |
| வாசனைத்திரவியங்கள் | 368.7 | 392.9 | 6.5 | 34.1 | 27.9 | -18.2 |
| காய்கறிகள் | 26.7 | 27.7 | 3.8 | 2.4 | 1.9 | -19.6 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 24.4 | 28.1 | 15.3 | 0.7 | 1.7 | 130.9 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 178.8 | 180.9 | 1.2 | 8.1 | 12.3 | 51.7 |
| கடலுணவு | 269.0 | 262.2 | -2.5 | 20.9 | 23.0 | 9.8 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **50.0** | **38.5** | **-23.1** | **3.6** | **1.4** | **-60.2** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **23.2** | **28.0** | **20.8** | **2.3** | **2.3** | **-0.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **13,106.4** | **11,910.7** | **-9.1** | **978.2** | **970.7** | **-0.8** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு III:**

**நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் (அ)**

| வகை | திசெ 2022 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2022 (ஐ.அ.டொ. மில்) | 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **2,701.8** | **2,761.0** | **2.2** | **209.2** | **211.1** | **0.9** |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 301.2 | 301.7 | 0.2 | 23.8 | 26.7 | 12.5 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 77.5 | 77.6 | 0.2 | 5.9 | 5.8 | -0.7 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 449.0 | 430.6 | -4.1 | 25.6 | 31.0 | 21.2 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 1,611.1 | 1,701.3 | 5.6 | 133.3 | 130.0 | -2.5 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **135.8** | **158.5** | **16.7** | **9.5** | **10.9** | **14.0** |
| 11 குடிபானங்கள் | 46.7 | 64.3 | 37.7 | 4.0 | 6.0 | 49.3 |
| 12 புகையிலை மற்றும் புகையிலைத் தயாரிப்புக்கள் | 89.2 | 94.2 | 5.7 | 5.5 | 4.9 | -11.7 |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **450.3** | **380.5** | **-15.5** | **32.4** | **25.1** | **-22.5** |
| 23 மசகு இறப்பர் | 42.4 | 29.5 | -30.6 | 3.3 | 1.8 | -46.0 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 228.6 | 210.7 | -7.9 | 17.2 | 13.5 | -21.5 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **568.0** | **539.4** | **-5.0** | **46.4** | **85.9** | **85.0** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 544.1 | 539.4 | -0.9 | 46.4 | 75.7 | 63.0 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 23.9 | - | - | - | 10.2 | - |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **89.9** | **69.6** | **-22.6** | **4.0** | **6.1** | **53.7** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 75.4 | 67.5 | -10.5 | 3.9 | 5.4 | 39.1 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **271.5** | **234.2** | **-13.7** | **15.8** | **24.1** | **52.2** |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **1,875.9** | **1,875.8** | **-0.01** | **155.2** | **159.6** | **2.8** |
| 62 இறப்பர் தயாரிப்புக்கள் வே.எ.கு | 680.3 | 675.1 | -0.8 | 51.9 | 60.4 | 16.2 |
| 65 புடவை நூழிழை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 447.1 | 398.9 | -10.8 | 30.3 | 30.4 | 0.6 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 510.4 | 559.2 | 9.6 | 58.2 | 50.2 | -13.9 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **692.1** | **730.9** | **5.6** | **55.3** | **44.1** | **-20.3** |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 364.2 | 352.8 | -3.1 | 30.8 | 22.8 | -26.1 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **6,320.3** | **5,160.4** | **-18.4** | **450.3** | **403.8** | **-10.3** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 5,832.0 | 4,713.8 | -19.2 | 412.8 | 371.0 | -10.1 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **0.8** | **0.4** | **-45.8** | **0.04** | **0.1** | **82.1** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **13,106.4** | **11,910.7** | **-9.1** | **978.2** | **970.7** | **-0.8** |

(அ) தற்காலிகமானது
வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும்.
https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு IV:**

**இலங்கை மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)**

| வகை | திசெ 2022 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2022 (ஐ.அ.டொ. மில்) | 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **2,813.0** | **3,043.9** | **8.2** | **218.5** | **281.3** | **28.8** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 1,607.9 | 1,693.0 | 5.3 | 118.3 | 156.6 | 32.3 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 430.5 | 116.9 | -72.8 | 15.3 | 23.6 | 54.2 |
| பால் உற்பத்திகள் | 225.3 | 273.7 | 21.5 | 16.2 | 20.0 | 23.4 |
| காய்கறிகள் (ஆ) | 318.4 | 358.6 | 12.6 | 24.1 | 33.8 | 40.1 |
| கடலுணவு | 66.4 | 79.4 | 19.6 | 3.6 | 8.6 | 139.4 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 257.8 | 435.5 | 68.9 | 32.8 | 30.1 | -8.1 |
| வாசனைத்திரவியங்கள் | 136.6 | 133.4 | -2.4 | 9.9 | 10.9 | 9.2 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 172.8 | 295.5 | 71.0 | 16.4 | 29.6 | 80.6 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 1,205.1 | 1,350.9 | 12.1 | 100.2 | 124.8 | 24.6 |
| தனியாள் ஊர்திகள் | 11.7 | 27.7 | 136.9 | 1.5 | 4.7 | 204.7 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 533.4 | 667.0 | 25.0 | 51.0 | 56.2 | 10.3 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 85.5 | 72.4 | -15.4 | 4.2 | 7.9 | 85.2 |
| புடவை மற்றும் துணைப்பொருட்கள் | 215.6 | 170.0 | -21.1 | 18.2 | 18.3 | 0.4 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 69.0 | 98.8 | 43.3 | 3.7 | 8.6 | 135.8 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 116.3 | 122.1 | 5.0 | 7.0 | 11.9 | 70.7 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 173.7 | 192.9 | 11.1 | 14.5 | 17.1 | 18.1 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **12,438.8** | **11,006.6** | **-11.5** | **1,005.9** | **980.5** | **-2.5** |
| எரிபொருள் | 4,896.8 | 4,702.6 | -4.0 | 516.5 | 417.5 | -19.2 |
| இதில் மசகெண்ணெய் | 483.8 | 1,137.5 | 135.1 | 143.0 | 133.6 | -6.5 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 4,048.2 | 3,095.4 | -23.5 | 287.1 | 245.3 | -14.6 |
| நிலக்கரி | 364.8 | 469.8 | 28.8 | 86.4 | 38.5 | -55.4 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 203.8 | 268.4 | 31.7 | 21.2 | 14.8 | -30.0 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 3,065.2 | 2,371.2 | -22.6 | 217.5 | 224.5 | 3.2 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 465.9 | 412.4 | -11.5 | 37.0 | 36.3 | -2.0 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 214.5 | 233.8 | 9.0 | 22.3 | 20.6 | -7.7 |
| கோதுமை மற்றும் சோளம் | 303.1 | 338.2 | 11.6 | 5.6 | 16.4 | 194.1 |
| அடிப்படை உலோகங்கள் | 323.2 | 313.8 | -2.9 | 13.1 | 45.0 | 243.4 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 650.8 | 474.6 | -27.1 | 37.4 | 41.0 | 9.6 |
| இரசாயன உற்பத்திகள் | 966.2 | 814.7 | -15.7 | 60.5 | 77.0 | 27.2 |
| வளமாக்கி | 275.9 | 235.0 | -14.8 | 9.6 | 9.0 | -5.9 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 334.7 | 200.2 | -40.2 | 14.2 | 23.5 | 65.3 |
| கனிம உற்பத்திகள் | 123.7 | 80.9 | -34.6 | 5.6 | 9.3 | 66.7 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 615.0 | 560.7 | -8.8 | 45.4 | 45.6 | 0.4 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **3,030.5** | **2,744.6** | **-9.4** | **198.9** | **249.4** | **25.4** |
| பொறி மற்றும் கருவிகள் | 1,969.0 | 1,867.6 | -5.1 | 132.6 | 166.0 | 25.1 |
| கட்டடப் பொருட்கள் | 926.3 | 775.1 | -16.3 | 63.1 | 74.8 | 18.5 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 132.1 | 98.5 | -25.4 | 2.7 | 8.4 | 207.8 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 3.0 | 3.3 | 9.2 | 0.4 | 0.3 | -27.5 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **8.8** | **16.0** | **82.9** | **0.1** | **0.6** | **348.1** |
| **மொத்த இறக்குமதிகள்** | **18,291.0** | **16,811.1** | **-8.1** | **1,423.4** | **1,511.8** | **6.2** |
| **எரிபொருள் அல்லாத இறக்குமதிகள்** | **13,394.2** | **12,108.5** | **-9.6** | **906.9** | **1,094.3** | **20.7** |

(அ) தற்காலிகமானவை
(ஆ) பருப்பு வகை, வெங்காயம், உருளைக்கிழங்கு, அவரை வகை மற்றும் பிற காய்கறிகளை உள்ளடக்குகின்றது

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## இணைப்பு V:

### நியம பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் திருத்தம் 4 இன்படி வகைப்படுத்தப்பட்ட இறக்குமதிச் செலவினம் (அ)

| வகை | திசெ 2022 (ஐ.அ.டொ. மில்) | திசெ 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) | 2022 (ஐ.அ.டொ. மில்) | 2023 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **0. உணவு மற்றும் உயிருடனான விலங்குகள்** | **2,162.2** | **2,186.1** | **1.1** | **145.2** | **180.8** | **24.5** |
| 02 பாற்பண்ணை உற்பத்திகள் மற்றும் பறவைகளின் முட்டைகள் | 225.7 | 289.6 | 28.3 | 16.2 | 20.3 | 24.9 |
| 03 மீன் மற்றும் மீன் தயாரிப்புக்கள் | 67.7 | 80.5 | 18.9 | 3.7 | 8.7 | 137.4 |
| 04 தானியங்கள் மற்றும் தானியத் தயாரிப்புக்கள் | 729.0 | 452.7 | -37.9 | 20.6 | 39.4 | 91.2 |
| 05 காய்கறிகள் மற்றும் பழவர்க்கங்கள் | 365.4 | 402.4 | 10.1 | 27.1 | 39.0 | 44.0 |
| 06 சீனி, சீனித் தயாரிப்புகள் மற்றும் தேன் | 257.8 | 435.6 | 68.9 | 32.8 | 30.1 | -8.1 |
| 07 கோப்பி, தேயிலை, கொக்கோ, வாசனைத்திரவியங்கள் மற்றும் அவற்றின் தயாரிப்புக்கள் | 180.0 | 180.8 | 0.5 | 13.4 | 14.5 | 8.8 |
| **1. குடிபானங்கள் மற்றும் புகையிலை** | **101.0** | **122.0** | **20.8** | **11.6** | **7.3** | **-37.1** |
| **2. மசகுப் பொருட்கள், எரிபொருள் தவிர்ந்த சமையலுக்குப் பயன்படுத்தப்படாதவை** | **465.3** | **328.8** | **-29.3** | **25.8** | **35.5** | **37.8** |
| 23 மசகு இறப்பர் | 283.6 | 157.3 | -44.5 | 10.3 | 20.8 | 102.5 |
| 26 புடவை துணிகள் மற்றும் அவற்றின் கழிவுகள் | 30.5 | 33.5 | 9.7 | 3.8 | 2.0 | -48.1 |
| **3. கனிப் பொருள் எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் மற்றும் தொடர்பான பொருட்கள்** | **4,896.8** | **4,702.6** | **-4.0** | **516.5** | **417.5** | **-19.2** |
| 33 பெற்றோலியம், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் தொடர்பான பொருட்கள் | 4,288.0 | 3,948.0 | -7.9 | 396.3 | 352.0 | -11.2 |
| 34 வாயு, இயற்கை மற்றும் தயாரிக்கப்பட்டவை | 243.9 | 284.9 | 16.8 | 33.8 | 26.9 | -20.4 |
| **4. விலங்கு மற்றும் காய்கறி எண்ணெய், கொழுப்பு மற்றும் மெழுகு** | **79.8** | **162.9** | **104.2** | **5.0** | **16.9** | **241.5** |
| 42 நிர்ணயிக்கப்பட்ட காய்கறி கொழுப்பு மற்றும் எண்ணெய், மசகு, சுத்திகரிக்கப்பட்ட அல்லது பின்னப்படுத்தப்பட்டவை | 65.6 | 151.1 | 130.3 | 4.0 | 16.0 | 296.8 |
| **5. இரசாயனங்கள் மற்றும் தொடர்பான உற்பத்திகள் வே.எ.கு** | **2,392.2** | **2,150.5** | **-10.1** | **155.6** | **178.0** | **14.4** |
| 54 மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் | 502.3 | 618.4 | 23.1 | 47.5 | 51.5 | 8.4 |
| 56 வளமாக்கி மற்றும் தயாரிக்கப்பட்டவை | 275.8 | 234.8 | -14.8 | 9.6 | 9.0 | -6.2 |
| 57 ஆரம்ப வடிவத்தில் பிளாத்திக்குகள் | 438.6 | 308.6 | -29.6 | 21.7 | 26.3 | 21.0 |
| 58 ஆரம்ப வடிவத்தில் அல்லாத பிளாத்திக்குகள் | 174.7 | 131.9 | -24.5 | 13.4 | 10.7 | -20.1 |
| **6. தயாரிக்கப்பட்ட பொருட்களின் வகைப்படி முக்கியமாக வகைப்படுத்தப்பட்டவை** | **5,114.1** | **4,267.8** | **-16.5** | **355.6** | **408.9** | **15.0** |
| 64 தாள், தாள் அட்டைகள் மற்றும் அவற்றின் பொருட்கள் | 436.7 | 399.1 | -8.6 | 36.2 | 34.4 | -4.8 |
| 65 புடவை நூழிலை, துணிகள், தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவை வே.எ.கு | 2,991.0 | 2,300.6 | -23.1 | 209.0 | 218.8 | 4.7 |
| 66 உலோகமல்லா கனிப்பொருள் தயாரிப்புக்கள் வே.எ.கு | 485.0 | 488.9 | 0.8 | 38.7 | 42.6 | 10.0 |
| 67 இரும்பு மற்றும் உருக்கு | 456.3 | 428.4 | -6.1 | 22.2 | 58.3 | 162.4 |
| **7. பொறிகள், போக்குவரத்துக் கருவிகள்** | **2,278.1** | **2,137.9** | **-6.2** | **145.9** | **196.8** | **34.9** |
| 72 குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கான சிறப்பியல்புவாய்ந்த பொறி | 396.5 | 264.1 | -33.4 | 18.9 | 25.3 | 33.5 |
| 74 பொதுவான கைத்தொழில்களுக்கான பொறி மற்றும் கருவிகள் வே.எ.கு பொறி உதிரிப்பாகங்கள் | 430.9 | 359.4 | -16.6 | 27.7 | 34.4 | 24.0 |
| 75 அலுவலக எந்திரங்கள் மற்றும் தன்னியக்க தரவு செயன்முறைப்படுத்தல் எந்திரங்கள் | 161.7 | 146.2 | -9.6 | 10.9 | 13.2 | 21.6 |
| 76 தொலைத்தொடர்பூட்டல் மற்றும் ஒலிப் பதிவுகள் மற்றும் மீள் தயாரிப்பு பொறிகள் மற்றும் கருவிகள் | 231.6 | 266.7 | 15.1 | 13.1 | 23.0 | 75.3 |
| 77 மின்னியல் பொறிகள், துணைப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் வே.எ.கு மற்றும் மின்னியல் உதிரிப்பாகங்கள் | 633.1 | 541.8 | -14.4 | 42.4 | 44.5 | 5.0 |
| 78 வீதி ஊர்திகள் | 158.2 | 140.4 | -11.2 | 9.6 | 15.9 | 65.9 |
| **8. பல்வகைத் தயாரிப்புப் பொருட்கள்** | **791.3** | **738.6** | **-6.7** | **61.9** | **69.6** | **12.4** |
| 84 ஆடைப் பொருட்கள் மற்றும் துணிகளுடன் இணைந்த பொருட்கள் | 191.5 | 146.3 | -23.6 | 16.5 | 16.9 | 1.9 |
| 87 தொழில்சார், விஞ்ஞான மற்றும் கட்டுப்பாட்டுச் சாதனங்கள் மற்றும் வே.எ.கு கருவிகள் | 143.2 | 159.2 | 11.1 | 10.6 | 12.4 | 16.7 |
| **9. பண்டங்கள் மற்றும் இப்புள்ளிவிபரத்தில் வேறு எங்கும் வகைப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்** | **10.3** | **13.8** | **34.6** | **0.3** | **0.5** | **84.9** |
| **மொத்த இறக்குமதிகள்** | **18,291.0** | **16,811.1** | **-8.1** | **1,423.4** | **1,511.8** | **6.2** |

(அ) தற்காலிகமானது

வே.எ.கு வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

குறிப்பு: முதலாவது இலக்கம் பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் 'பகுதியினையும்' முதலாவது மற்றும் இரண்டாவது இலக்கங்கள் அதன் 'பிரிவினையும்' எடுத்துக்காட்டுகின்றன. மேற்குறிப்பிட்ட அட்டவணை பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளை மாத்திரம் காட்டுகிறது. பன்னாட்டு வர்த்தக வகைப்படுத்தல் நியமம் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2017இன் சிறப்புக் குறிப்பு 4இனை தயவுசெய்து பார்க்கவும். https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2017/ta/9_Chapter_05.pdf

**இணைப்பு VI:**

## பணிகள் கணக்கு – உட்பாய்ச்சல்கள் (அ)

| | சன-23 (ஐ.அ.டொ. மில்) | சன-24 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **பணிகள்** | **412.5** | **589.7** | **43.0** |
| **உற்பத்திப் பணிகள்** | **1.4** | **1.2** | **-11.2** |
| **பராமரிப்பு மற்றும் திருத்த பணிகள் வே.எ.கு.** | **3.7** | **1.5** | **-59.2** |
| **போக்குவரத்து** | **141.0** | **139.0** | **-1.4** |
| கடல் போக்குவரத்து | 70.2 | 82.2 | 17.1 |
| சரக்கு | 44.4 | 54.0 | 21.8 |
| ஏனையவை | 25.8 | 27.7 | 7.3 |
| விமானப் போக்குவரத்து | 70.8 | 56.1 | -20.7 |
| பயணிகள் | 24.3 | 28.6 | 17.6 |
| சரக்கு | 12.1 | 2.9 | -75.8 |
| ஏனையவை | 34.4 | 24.6 | -28.5 |
| **பயணம்** | **153.5** | **341.8** | **122.7** |
| **கட்டடவாக்கம்** | **17.2** | **14.7** | **-14.4** |
| வெளிநாட்டுக் கட்டடவாக்கம் | 1.0 | 4.6 | 369.7 |
| அறிக்கையிடல் பொருளாதாரத்தின் கட்டடவாக்கம் | 5.4 | 4.7 | -13.6 |
| கட்டடவாக்க, பொறியியல் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பணிகள் | 10.8 | 5.4 | -49.8 |
| **காப்புறுதி மற்றும் ஓய்வூதியப் பணிகள்** | **1.4** | **1.6** | **14.6** |
| நேரடி காப்புறுதி | 1.4 | 0.9 | -33.1 |
| மீள்காப்புறுதி | 0.04 | 0.7 | 1,602.7 |
| **நிதியியல் பணிகள்** | **5.8** | **1.9** | **-67.6** |
| **புலமைச் சொத்தின் பயன்பாட்டிற்கான கட்டணங்கள் வே.எ.கு.** | **0.04** | **4.2** | **10,961.5** |
| **தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள்** | **68.9** | **47.3** | **-31.2** |
| தொலைத்தொடர்பூட்டல் பணிகள் | 6.7 | 7.0 | 5.0 |
| கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பணிகள் | 62.2 | 43.2 | -30.6 |
| கணனி பணிகள் | 61.1 | 42.5 | -30.5 |
| தகவல் பணிகள் | 1.1 | 0.7 | -35.9 |
| **ஏனைய வியாபாரப் பணிகள்** | **15.9** | **34.3** | **115.1** |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் | 1.4 | 3.8 | 172.7 |
| தொழில்சார் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் | 4.1 | 14.0 | 243.9 |
| தொழில்நுட்ப, வர்த்தகத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் | 10.5 | 16.4 | 57.1 |
| **பிரத்தியேக, கலாசார மற்றும் களியாட்டப் பொழுதுபோக்குப் பணிகள்** | **3.5** | **1.9** | **-43.9** |
| கட்புல செவிப்புல மற்றும் தொடர்புடைய பணிகள் | 0.02 | 0.9 | |
| ஏனைய தனிப்பட்ட, கலாசார மற்றும் பொழுதுபோக்குசார் பணிகள் | 3.4 | 1.1 | -68.9 |
| **அரசாங்கப் பொருட்கள் மற்றும் பணிகள் வே.எ.கு.** | **0.2** | **0.1** | **-14.7** |

(அ) தற்காலிகமானது, பயண உட்பாய்ச்சல்கள் நீங்கலாக அனைத்துத் தரவுகளும் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமைத் தரவுகளின் அடிப்படையிலமைந்துள்ளன. பயண உட்பாய்ச்சல் தரவுகள் இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் அடிப்படையிலமைந்துள்ளன.

**மூலங்கள்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை – இலங்கை மத்திய வங்கி, இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**இணைப்பு VII:**

## பணிகள் கணக்கு – வெளிப்பாய்ச்சல்கள் (அ)

| | சன-23 (ஐ.அ.டொ. மில்) | சன-24 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **பணிகள்** | **147.8** | **182.9** | **23.8** |
| **உற்பத்திப் பணிகள்** | **14.2** | **16.8** | **17.9** |
| **பராமரிப்பு மற்றும் திருத்த பணிகள் வே.எ.கு.** | **0.2** | **0.3** | **34.0** |
| **போக்குவரத்து** | **61.2** | **64.8** | **5.9** |
| கடல் போக்குவரத்து | 24.3 | 31.6 | 30.0 |
| சரக்கு | 22.1 | 30.8 | 39.1 |
| ஏனையவை | 2.1 | 0.8 | -63.5 |
| விமானப் போக்குவரத்து | 36.2 | 32.5 | -10.4 |
| பயணிகள் | 16.1 | 19.2 | 18.9 |
| சரக்கு | 12.3 | 3.9 | -68.3 |
| ஏனையவை | 7.7 | 9.4 | 21.1 |
| **பயணம்** | **13.3** | **14.7** | **11.1** |
| **கட்டடவாக்கம்** | **12.8** | **3.3** | **-74.1** |
| வெளிநாட்டுக் கட்டடவாக்கம் | 0.0 | 0.3 | |
| அறிக்கையிடல் பொருளாதாரத்தின் கட்டடவாக்கம் | 9.5 | 0.4 | -95.5 |
| கட்டடவாக்க, பொறியியல் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பணிகள் | 3.3 | 2.6 | -21.1 |
| **காப்புறுதி மற்றும் ஓய்வூதியப் பணிகள்** | **1.6** | **4.3** | **160.7** |
| நேரடி காப்புறுதி | 0.6 | 1.0 | 64.4 |
| மீள்காப்புறுதி | 1.0 | 3.3 | 213.8 |
| **நிதியியல் பணிகள்** | **3.7** | **6.6** | **80.3** |
| **புலமைச் சொத்தின் பயன்பாட்டிற்கான கட்டணங்கள் வே.எ.கு.** | **5.0** | **7.4** | **47.3** |
| **தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள்** | **17.2** | **15.0** | **-12.7** |
| தொலைத்தொடர்பூட்டல் பணிகள் | 3.6 | 2.8 | -23.7 |
| கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பணிகள் | 13.6 | 12.2 | -9.7 |
| கணனி பணிகள் | 9.9 | 10.6 | 6.5 |
| தகவல் பணிகள் | 3.6 | 1.7 | -53.9 |
| **ஏனைய வியாபாரப் பணிகள்** | **18.5** | **48.6** | **162.4** |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் | 6.0 | 6.7 | 10.5 |
| தொழில்சார் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் | 3.5 | 23.3 | 557.4 |
| தொழில்நுட்ப, வர்த்தகத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் | 8.9 | 18.6 | 108.8 |
| **பிரத்தியேக, கலாசார மற்றும் களியாட்டப் பொழுதுபோக்குப் பணிகள்** | **0.004** | **1.1** | **24,607.4** |
| கட்புல செவிப்புல மற்றும் தொடர்புடைய பணிகள் | 0.004 | 1.0 | |
| ஏனைய தனிப்பட்ட, கலாசார மற்றும் பொழுதுபோக்குசார் பணிகள் | 0.0 | 0.1 | |
| **அரசாங்கப் பொருட்கள் மற்றும் பணிகள் வே.எ.கு.** | **0.05** | **0.1** | **136.0** |

(அ) தற்காலிகமானது

**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை – இலங்கை மத்திய வங்கி

**இணைப்பு VIII:**

## பணிகள் கணக்கு – தேறிய (அ)

| | சன-23 (ஐ.அ.டொ. மில்) | சன-24 (ஐ.அ.டொ. மில்) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| **பணிகள்** | **264.7** | **406.8** | **53.7** |
| **உற்பத்திப் பணிகள்** | **-12.8** | **-15.5** | **21.1** |
| **பராமரிப்பு மற்றும் திருத்த பணிகள் வே.எ.கு.** | **3.5** | **1.3** | **-64.3** |
| **போக்குவரத்து** | **79.8** | **74.1** | **-7.1** |
| கடல் போக்குவரத்து | 45.9 | 50.6 | 10.3 |
| சரக்கு | 22.2 | 23.3 | 4.7 |
| ஏனையவை | 23.8 | 27.0 | 13.5 |
| விமானப் போக்குவரத்து | 34.6 | 23.7 | -31.6 |
| பயணிகள் | 8.2 | 9.4 | 15.1 |
| சரக்கு | -0.3 | -1.0 | 293.0 |
| ஏனையவை | 26.7 | 15.3 | -42.8 |
| **பயணம்** | **140.2** | **327.0** | **133.2** |
| **கட்டடவாக்கம்** | **4.3** | **11.4** | **162.1** |
| வெளிநாட்டுக் கட்டடவாக்கம் | 1.0 | 4.3 | 340.3 |
| அறிக்கையிடல் பொருளாதாரத்தின் கட்டடவாக்கம் | -4.1 | 4.3 | -204.2 |
| கட்டடவாக்க, பொறியியல் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பணிகள் | 7.5 | 2.8 | -62.5 |
| **காப்புறுதி மற்றும் ஓய்வூதியப் பணிகள்** | **-0.2** | **-2.7** | **1,039.0** |
| நேரடி காப்புறுதி | 0.8 | -0.04 | -105.7 |
| மீள்காப்புறுதி | -1.0 | -2.6 | 156.9 |
| **நிதியியல் பணிகள்** | **2.2** | **-4.7** | **-319.5** |
| **புலமைச் சொத்தின் பயன்பாட்டிற்கான கட்டணங்கள் வே.எ.கு.** | **-5.0** | **-3.1** | **-36.8** |
| **தொலைத்தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள்** | **51.7** | **32.3** | **-37.4** |
| தொலைத்தொடர்பூட்டல் பணிகள் | 3.0 | 4.2 | 39.4 |
| கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து வியாபாரப் பணிகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான பணிகள் | 48.6 | 30.9 | -36.4 |
| கணனி பணிகள் | 51.2 | 31.9 | -37.6 |
| தகவல் பணிகள் | -2.6 | -1.0 | -61.4 |
| **ஏனைய வியாபாரப் பணிகள்** | **-2.6** | **-14.3** | **455.5** |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் | -4.6 | -2.8 | -38.8 |
| தொழில்சார் மற்றும் முகாமைத்துவ ஆலோசனைப் பணிகள் | 0.5 | -9.2 | |
| தொழில்நுட்ப, வர்த்தகத்துடன் தொடர்புடைய மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் | 1.5 | -2.2 | -245.8 |
| **பிரத்தியேக,கலாச்சார மற்றும் களியாட்டப் பொழுது போக்குப் பணிகள்** | **3.5** | **0.9** | **-75.0** |
| கட்புல செவிப்புல மற்றும் தொடர்புடைய பணிகள் | 0.02 | -0.1 | -623.6 |
| ஏனைய தனிப்பட்ட, கலாசார மற்றும் பொழுதுபோக்குசார் பணிகள் | 3.4 | 1.0 | -71.9 |
| **அரசாங்கப் பொருட்கள் மற்றும் பணிகள் வே.எ.கு.** | **0.1** | **0.04** | **-70.5** |

(அ) தற்காலிகமானது

**மூலம்:** பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமை – இலங்கை மத்திய வங்கி